மயூரகிரி அந்தாதி

ஆசிரியர்

வேப்பங்குளம்

மதுரகவி ஆண்டவர்

என்னும்

முத்தய்யப் பாவலர்

உரைவிளக்கம்

குன்றக்குடி ஆதீனப் புலவர்

வித்துவான் க. கதிரேசன் எம்.ஏ. பி;எட்

பூவாளூர். 621 712

அலைபேசி : 98651 93754

மயூரகிரி அந்தாதி

காப்பு - வெண்பா

பேரோங்கு குன்றைமலைப் பேரின்ப சாகரன்மேல்
சீரோங்கும் அந்தாதி செப்பவே - காரோங்கும்
அஞ்சுகரத்(து) எந்தைஅவன் அஞ்சல்என் போருக்(கு)அருளும்
கஞ்சமலர்ச் சேவடியே காப்பு.

குறிப்புரை : பேரோங்கு= மிகஉயர்ந்த புகழுடைய. காரோங்கு= கார்மேகம் மிகக்கூடும். காரோங்கு குன்றைமலை என்க. பேரின்ப சாகரன்= மிகப்பெரிய இன்பக்கடல்வடிவன் - அருள்தரு சண்முகநாதப்பெருமான். அஞ்சுகரத்து எந்தை= ஐந்து கைகளுடைய விநாயகராகிய எம் தந்தை. அஞ்சல்= அபயம் - அடைக்கலம். கஞ்சமலர்= தாமரைமலர்.

பொழிப்புரை : மிகஉயர்ந்த புகழ்வாய்ந்ததும், கார்மேகம் ஒன்றும்கூடுவதும் ஆகிய குன்றக்குடி மலைமேல் எழுந்தருளியுள்ள மிகப்பெரிய இன்பக்கடல்வடிவனாம் அருள்தரு சண்முகநாதப்பெருமானைப் போற்றும் சிறப்புவாய்ந்த அந்தாதிநூல் இயற்ற; ஐந்துகைகளுடையவனும், எம்தந்தையும், அடைக்கலம் என்று வந்தவர்க்கு அருள்புரிகிறவனுமாகிய அருள்தரு தோகையடி விநாயகரின் தாமரைமலர் போன்ற செம்மைநலத் திருவடிகள் காப்பாகும்.

விளக்கம் : பேரின்ப சாகரன் : படைத்தல் காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் புரிவதுகடல. அதுபோல் அருள்தரு சண்முகநாதப்பெருமான் உலகின்மீதும் உயிர்களின்மீதும் ஐந்தொழில் புரிந்து இன்பம் தருகிறவனாதலின் இன்பசாகரன் என்றார்.

ஐந்து கரத்தன் : விநாயகர். விநாயகரின் மிகத்தொன்மையான வடிவு, இருகைகள் துதிக்கை ஆக மூன்றுகைகளே. சான்று : பிள்ளையார்பட்டி, குன்றக்குடி கீழக்குடைவரைகோயில் ஆகிய இடங்களில் எழுந்தருளியுள்ள விநாயகர், துதிக்கையுள்ளிட்ட மூன்று கரமுடையவர். பிற்காலத்தில்தான் விநாயகர் ஐந்துகரத்தனாய் எழுந்தருளினார்.

இலக்கணக்குறிப்பு : பேரோங்கு குன்றைமலை - வினைத்தொகை. கார் - பண்பாகுபெயர். எந்தை - மரூஉமொழி. கஞ்சமலர் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. சேவடி - பண்புத்தொகை.

நூல்

கட்டளைக்கலித்துறை

1. **ஓங்கார வீட்டில் உறுமணி யேதிகழ் உன்பதத்தில்**
பாங்காக ஏழை பரிவோ டுரைக்கும் பனுவல்கொண்டு
தாங்காத மையல் தருமாதர் பாசம் தவிர்த்(து)உனையான்
நீங்கா திருக்க வரம்தரு வாய்இது நிச்சயமே.

குறிப்புரை : வீடு= மனை. பாங்காக= பக்குவமாக. பனுவல்= செய்யுள். தாங்காத= பிறர்பொறுக்க முடியாத . மையல்= காமம். பாசம்= தொடர்பு. நீங்காதிருக்க= மனம் சொல் செயல் ஆகிய வற்றால் நீங்க இயலாதிருக்க. . நிச்சம்= உறுதி. நிச்சயமே உனையான் நீங்காதுஇருக்க வரம்தருவாய் என்க.

பொழிப்புரை : ஓங்காரமாகிய மனையில் ஒளிமிக்கமாணிக்கமாய் உள்ளவனே! ஏழையாகிய நான் பக்குவமாக, அன்புடன் சொல்லும் பாடலைஉனது திருவடிகளில் ஏற்று; யாரும்பொறுத்துக் கொள்ள வியலாத காமமூட்டும் விலைமகளிர் தொடர்பைக் கைவிட்டு, உறுதியாக உன்னையே மனத்தால் சொல்லால் செயலால் நீங்காதுவாழ அருள்தருவாயாக.

விளக்கம் : ஓங்கார வீட்டில் உறுமணி :
" ஓங்காரத்து உட்பொருளை " (திருமுறை . 6 திருவானைக்கா. முற்றாத....)
" ஓம்மொழிப்பொருளை " (காஞ்சிப்புராணம். திருநகரப். சைவமடம்)

2. **நிச்சய மாய்உனை யன்றிஇங்(கு) ஆர்எவர் நேசமுற்றேன்**
இச்சக வாழ்வில் இடையாது இ(து)உததி இன்பமொடு
துற்சன ராம்அசு ராதியை வென்றநின் துய்யபதம்
செச்சை இலங்கவந்(து) ஆள்வாய் சிகிமலைச் சிற்பரனே.

குறிப்புரை : நிச்சயமாய்= உறுதியாக. நேசம்= அன்பு - பத்திமை. இச்சகவாழ்வில் நிச்சயமாய் உனையன்றி உததி இன்பமொடு யார் எவர்நேசம் உற்றேன் என்க. சகம்= உலகம். உததி இன்பம்= கடலொத்த இன்பம். துற்சனர்= துட்டர். செச்சை= வெட்சி மலர். சிற்பரன்= சிவன் - மேலான ஞானி.

பொழிப்புரை : மயில் மலைஉச்சியில் அமர்ந்துள்ள மேலான ஞானியே! இவ்வுலக வாழ்வில் உன்னையன்றி உறுதியாக யார்மேல் எவர்மேல், கடல்போன்ற இன்பமுடன்இடையறாது பத்திசெலுத்தினேன். உன்மீதே பத்திசெலுத்தினேன். துட்டராகிய அசுரர் முதலானோரை வெற்றிகொண்ட உனதுதூய திருவடிகளில் வெட்சிமலர் விளங்கவந்து என்னை ஆட்கொள்வாயாக.

விளக்கம் : ஆர் எவர் நேசமுற்றேன் என்பதன் மூலம் உன்னைத்தவிர எத்தகையஒருவர் மேலும் எனக்குஅன்பில்லை என்றார்.

செச்சைமலர் = வெட்சிமலர். வெட்சிமலர், பிறர்நாட்டு ஆநிரைகளைக் கவரச்சூடுவோர்க்கு உரியது. " வெட்சி நிரைகவர்தல் " என்பது புறப்பொருள் வெண்பாமாலை. வெட்சிசூடிவந்து என்னை ஆள்க என்றதன்மூலம் கொடிய மும்மலப்பகையிலிருந்து என்னைமீட்டுக் காத்தருள் என்றார்.

இலக்கணக்குறிப்பு : உததி இன்பம் - உவமத்தொகை. செச்சை இலங்கவந்து ஆள் - குறிப்பில் தருமொழி.

3. **சித்பரம் ஆகிய தேவா திருவருள் செய்துவிட்டால்**
தத்பரம் மேவி ஒருநாளும் சாவின்றிச் சார்ந்(து)இனிய
பொற்பதம் தோய்ந்து புனலாடி இன்பம் புனைந்துசடம்
கற்பம்அ தாகி இருப்பேன் கருணையைக் காட்டுவையே.

குறிப்புரை : சிற்பரம் = மேலான ஞானி. தேவா= தெய்வமே. தற்பரம் மேவி= சிவமாம்தன்மை யடைந்து. சாவின்றி= இறவாது உன்னை அடைந்து. தோய்ந்து= கலந்து. புனலாடி= அருட்புனலில் திளைத்து. கற்பம்= அற்பம்.

பொழிப்புரை : மேலான ஞானியாகிய தெய்வமே! நீ எனக்கு அருள்புரியின், நான்சிவமாந்தன்மை யடைந்து - மலமில்லாத்தன்மையடைந்து, உன்னைச்சார்ந்து இறப்பின்றி, உனது இனிய மிகஉயர்ந்த திருவடிகளையடைந்து, உன்அருட்புனலில்திளைத்து இன்புற்று, இவ்வுடம்பை அற்பமக்கி - பிறப்பின்றி இனிமையுடன், வீடுபேறாகிய உன்திருவடிக்கீழ் வாழ்வேன். கருணை காட்டுக.

விளக்கம் : நீ திருவருள் செய்தால், மலம் நீங்கி மலமிலாத் தன்மையடைதல், திருவடியடைதல், சாவின்மை, அருட்புனலில் திளைத்தல், இன்புறல், பிறப்பறுதல் பெறுவேன் என்று தன் ஈடேற்றத்தை வரிசையாக அடுக்கிய அழகுநோக்குக.

இலக்கணக்குறிப்பு : புனல் - உருவகம். காட்டுவை - முன்னிலை ஒருமை வினைமுற்று.

4. **காட்டுவை ஞானக் கருவூலம் காணக் கனத்தமையல்**
பூட்டுவை மோனம் புகுத்துவை யாவும் பொதிந்தஇடம்
நாட்டுவை என்றும் நலியா திருந்து நலம்பெ(று)எனச்
சூட்டுவை வேதம் துதித்திடும் தூய துணைப்பதமே.

குறிப்புரை : கருவூலம்= செல்வமுள்ள இடம். கனத்தமையல்= மிக்க பேரன்பு. யாவும் பொதிந்த இடம்= அனைத்துநலன்களும் பெற்ற இடம் - வீடுபேறு. நாட்டுவை= நிலைக்கவைப்பாய். வேதம் துதித்திடும் தூய துணைப்பதம் சூட்டுவை என்க.

பொழிப்புரை : பெருமானே! நீ ஞானமாகிய செல்வமிருக்குமிடம் காட்டுவாய், அதில் மிக்க பேரன்பு கொள்ளச்செய்வாய், கூடவே மோனநிலையையும் உண்டாக்குவாய், அனைத்து நலன்களும் ஒருங்கு பொதியப் பெற்ற வீடுபேற்றில் நிலைக்கச்செய்வாய், மறைகள் போற்றும் உனது தூய இருதிருவடிகளையும் சூட்டி வாழ்விப்பாய். இதுவே உன் குணமாகும்.

விளக்கம் : மோனம் ; " மோனம் என்பது ஞானவரம்பு "

இலக்கணக்குறிப்பு : காட்டுவை, பூட்டுவை, புகுத்துவை, நாட்டுவை, சூட்டுவை - முன்னிலை ஒருமைவினைமுற்றுகள்.

5. **துணைப்பத மே(வு)ஈச் சுரர்ஆதி யோர்கள் துதித்தும்அறை**
இணைப்பத மேநிதம் நீதரு வாய்என்(று) இறைஞ்சிநிற்க
அணைப்பது நம்கட னாமென அன்(று)உன் அருளளித்தும்
அணைப்பதம் மேவ எழுந்தருள் சண்முக மாணிக்கமே.

குறிப்புரை : துணைப்பதம் மேவு ஈச்சுரர் ஆதியோர்= இருதிருவடிகளையும் வந்துபொருந்திய இறைவர் முதலியோர். அறை இணப்பதமே நீ தருவாய்= போற்றப்பெறும் உன் இருதிருவடிகளையும் தந்தருள். இறைஞ்சி= துதித்து. அணைப்பது நம் கடனாம்= இவனை நம்முடன் அணைத்துக்கொள்வது நம்கடமையாகும், அன்று= அப்போது. உன் அருள் அளித்தும் அணைப்ப= உனது அருளை வழங்கி அணைப்பதற்கு. மேவ எழுந்தருள்= என்பால் பொருந்த வருக.

பொழிப்புரை : உன்இருதிருவடிகளையும் வந்து பொருந்திய இறைவர்முதலியோர் வணங்கியும், போற்றப்பெறும் இருதிருவடிகளையும் நீ தந்தருள் என்று துதிக்கவும்,அப்போது, இவனைநாம் நம்முடன் அணைத்துக் கொள்வது நம் கடமையாகுமென்றும், உன்னருளை வழங்குவோம்என்றும் எண்ணி என்னை உன்னோடு அணைத்துக்கொள்ள அருள்தரு சண்முகநாதனாகிய மாணிக்கமே எழுந்தருள்க.

விளக்கம் : ஈச்சுரர் ஆதியோர் என்றது நான்முகன் திருமால் முதல்யோரை.

இச்செய்யுளின் மையக்கருத்து,

" திருப்பெருந் துறைஉறை வாய்திரு மாலாம்
அவன்விருப்பு எய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்துஎமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. " (திருவாசகம் 377 .)

என்பதை நினைவூட்டுகிறது. மெய்க்கருணை= ஞானக்கருணை வடிவான அம்மை.

இலக்கணக்குறிப்பு : அணைப்ப தம்- தம்- அசைச்சொல்.

6. **மாணிக்கம் என்றும் மதிப்(பு)அடங்காத வைரமென்றும்**
தோணிக்குன் றாருயர் காழிப் பதிதனில் தோன்றிஅம்மை
பேணிக்குன் றாம்முலை ஊறல்உண் டான்என்றும் பேசரிய
வேணிப்பி ரான்நன்று கொண்டா டினன்உனை வேலவனே.

குறிப்புரை : தோணிக்குன்றார்= சீர்காழி அருள்தரு தோணியப்பர். தோன்றி= திருஞானசம்பந்தராகத் தோன்றி,அம்மை பேணி= அருள்தரு திருநிலைநாயகியால் (சீர்காழியில் எழுந்தருளியுள்ள அம்மையால்) பேணப்பெற்று, முலைஊறல்= திருமுலைப்பால். வேணிப்பிரான்= சடையுடைய சிவபிரான்.

பொழிப்புரை : வேலவனே! திருத்தோணியப்பரின் தோணிபுரமாகிய சீர்காழியில் தோன்றி, அருள்தரு திருநிலைநாயகியால் மாணிக்கம் என்றும் மதிக்கவியலாத வைரம் என்றும் பேணப்பெற்று, அவளுடைய திருமுலைப்பால் உண்டான் என்று, சடைமுடியுடை சிவபிரான் அளவிடற்கரிய உன்னைக்கொண்டாடினன்.

விளக்கம் : அம்மையாலும் அப்பனாலும் போற்றப்பெற்றவர், திருமுலைப்பால் உண்டவர் திருஞானசம்பந்தர் என்பது பொருந்தும். சமயகுரவர் ஆகிய திருஞானசம்பந்தர், சிவபாத இருதயர், பகவதியார் ஆகிய இருவர்க்கும் மகனாகப் பிறந்தவர். ஆனால், என்றும் இளமை மணம் கடவுள் தன்மையனாய், சிவபரம்பொருளின் நுதற்கண் பொறிகளில் தோன்றியவனும், "ஆதலால் நமதுசத்தி அறுமுகன் " (கந்தபுராணம்) என்று சிவத்தால் போற்றப்பெற்றவனும் பிறவா இறவாஇயல்பினனுமாகிய முருகனாகத் திருஞானசம்பந்தரை கூறுவது பொருந்தாது. திருஞானசம்பந்தரை உயர்த்திக்கூறவேண்டும் என்பதற்காக அவரை முருகன் என்றும், முருகனின் அம்சம் என்றும் கூறுவது, அக்காலக் கொடுமையின் விளைவு. அவர் முருகனின் அம்சம் என்றால், தேன்கடலில் இருந்து எடுக்கப்பெற்ற ஒருதுளி, அத்தேன்கடலின் எல்லாவகைச்சிறப்பும் கொண்டு அதன்அம்சம் ஆதல்போல், முருகனின் அம்சம் என்று கூறப்பெறும் திருஞானசம்பந்தரும், முருகப்பிரானுடன் ஒத்தநிலையினர் ஆதல் வேண்டும் அல்லவா!. அவ்வாறில்லை. சிவபிரானை வேண்டியும் எண்ணியும் அற்புதங்கள் புரிந்த அவரைச் சிவமேயான முருகன் என்றபிறர்கூற்று, இவரால் வழிமொழியப்பெற்றது பொருந்தாது என்க.

7. **வேலவ னேமயில் மீதினில் ஊர்ந்து விரிஞ்சன்முதல்**
மாலவ னேதொழ வீற்றிருப் பாய்குன்றை மாமலையில்
நூலவ னேஎன உன்அடி யார்கள் நுவன்றவிருப்
பாலவர் ஆசைப் பரிவும்கை மேலிற் பலித்திட்டதே.

குறிப்புரை : விரிஞ்சன்= நான்முகன் . மால் அவனே தொழ= திருமாலாகிய அவனும் வணங்க. நூலவனே= விதிப்பவனே. ஆசைப்பரிவு= ஆசையும் உன்மேல்வைத்த அன்பும். கைமேலில் பலித்திட்டதே= உடனடியாக நிறைவேறியது.

பொழிப்புரை : வேலேந்தியவனே! குன்றக்குடியிலுள்ள பெருமைபொருந்தி மயில்மலையில் எழுந்தருளி, நான்முகன் திருமால் முதலியோர் தொழ வீற்றிருப்பவனே! அனைவர்க்கும் விதியை விதிப்பவனே என்று உன் அடியவர் விருப்பால்போற்ற அவர்களின் ஆசையும் - விருப்பமும் உன்மேலன்பும் உடனடியாகப் பலித்தது.

8. **பலித்திட வேண்டிப் பலகலை ஆய்ந்து பருவம்இதில்**
சலித்(து)இருந் தால்இனி என்(று)அடி யேன்உனைச் சார்ந்திடுநாள்
ஒலித்திடும் வீரகண் டாமணிப் பாதம் உவந்(து)அளிக்க
வலித்திட வேஇங்குத் தாமதிக் கா(து)இனி வந்தருளே.

குறிப்புரை : பலகலை= பலநூல்கள். பருவம் இதில்= உன் அருள்பெறவேண்டிய இந்நிலையில். வீரகண்டாமணி= வீரம் குறித்துக்காலில் கட்டும் கழல் - வீரக்கழல். வலித்திட= மிகவிரைந்து.

பொழிப்புரை : என்வேண்டுதல் நிறைவேறப் பற்பலநூல்களை ஆயும் இப்பருவத்தில், நீ மனம் சலித்து வராதிருந்தால் அடியேன் உன்னைச்சார்கின்ற பேறுபெறும் நாள்இனி என்றுவாய்க்கும்? ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த உனதுதிருவடியை அருள, தாமதிக்காது மிகவிரைந்து இனிமேலாவது வந்தருள்க.

விளக்கம் : காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதற்கேற்ப, உன்னருள்பெறவேண்டும் என்ற ஆசை என்பால் மீக்கூர்ந்துள்ளபோதே அருள்க என்றார்.

9. **வந்தருள் வாய்எனை மாதவன்ஆக்கி மகிழ்ந்துவரம்**
தந்தருள் வாய்சிவ சற்குருவே உன்ந யனியினால்
அந்தக னோ(டு)அமர் ஆடுதல் நீக்கி அவனைவென்று
சந்ததம் வாழக் கருணசெய் வாய்இ(து)என் சங்கற்பமே.

குறிப்புரை : மாதவன்= சிறந்ததவத்தோன். சிவசற்குருவே+ சிவமாகிய ஞானகுருவே / சிவபிரானுக்கு வாய்த்த ஞானகுருவே. நயனி= திருநோக்கு. அமராடுதல் நீக்கி= போரிடுவதைத் தவிர்த்து. சந்ததம் வாழ= சுகத்தில் - வீடுபேற்றில் வாழ. சங்கற்பம்= விருப்பம்.

பொழிப்புரை : சிவபிரானுக்கு வாய்த்த ஞானகுருவே! என்பால் அருள வருக! என்னைச் சிறந்த தவத்தோன் ஆக்கி மகிழ்வுடன் வரம்தந்தருள்க! உன்திருக்கண் நோக்கினால் நான் யமனுடன்போரிடுவதை நீக்கி அவனை வென்று நான் சுகத்தில் - வீடுபேற்றில் - வாழக்கருணைசெய்க. இதுவே என்விருப்பமாகும்.

விளக்கம் : சிவசற்குரு என்றதொடர், சிவமாகிய ஞானகுரு என்றும், சிவபெருமானுக்கு உபதேசித்த ஞானகுரு என்றும் பொருள்தரும்.

இலக்கணக்குறிப்பு : அருள்வாய், செய்வாய் - முன்னிலை ஒருமை வினைமுற்றுகள்.

10. **சங்கற்பம் என்ப(து)அநேகம் உண்டே கொடுந் தையலர்கள்**
கொங்கைக்குன் றானதில் சாராம லும்அவர் கொஞ்சுதலால்
பங்கப்ப டாமலும் மாயா மயக்கினைப் பற்றறுத்துத்
துங்கத் தவத்தினில் சேர்ந்திட வேஅருள் சுந்தரனே.

குறிப்புரை : கொடுந் தையலர்= விலைமாதர். சாராமலும்= பொருந்தாமலும். பங்கப்படுதல்= அவமானப்படுதல். மாயா மயக்கு= அழியாத காமமயக்கம். பற்றறுத்து= மனம் கொண்ட பற்றுதலைக் களைந்து. துங்கம்= தூய்மை.

பொழிப்புரை : அழகுவடிவனே! ஒருவரின் விருப்பம் பல உண்டு. என்விருப்பம், விலைமாதரின் கொங்கைகளாகிய குன்றினைப் பொருந்தாமலும், அவர்களின் கொஞ்சும்பேச்சினால் அவமானப்படாமலும் அவர்கள்மேல் கொண்ட அழியாத காமமயக்கத்தை மனத்திலிருந்து களைந்து, தூயதவத்தில் நான்சேர அருள்புரிவாயாக.

விளக்கம் : முன்பு விற்ற அல்குலைத் தனதாக்கல், மீண்டும் மீண்டும் பலர்க்கு விற்றல், இன்பம் தருவதுபோல் அவர்க்குப் பழிபாவம் அச்சம் தீராநோய் என்று பலவற்றைத்தருதலால் விலைமாதரைக் கொடுந்தையலார் என்றார்.

காமம்," சாரச்சாரச் சார்ந்து தீரத்தீரத் தீராதது " (குறுந்தொகை) ஆதலின் மாயாமயக்கு என்றார்.

11. **சுந்தர மேனிச் செழுஞ்சுட ரேசுயஞ் சோதியுறு**
மந்தர மேஉனை யான்மற வேன்வள்ளி மாமயிலும்
சந்தணி கொங்கைமின் னாள்தெய்வ யானை தழுவஇங்கு
வந்திட வேண்டும் மயிலேறி இத்ததி மன்னவனே.

குறிப்புரை : சுயஞ்சோதி= இயற்கைப் பேரொளி. மந்தரம்= மலை. சந்து= சந்தனம் இத்ததி= இப்போது.

பொழிப்புரை : பேரரசே! மிக்கஒளிவடிவான அழகிய திருமேனியனே! ஒளியேவடிவான மலையே! உன்னைநான் என்றும்மறவேன். வள்ளிநாச்சியாராகிய அழகியமயிலும், சந்தனம்பூசிய கொங்கைகளுடைய மின்னல் போன்ற தெய்வயானை அம்மையும் உன்னை இருபுறமும் தழுவ மயில்மேலேறி இப்போதுஇங்கு வந்தருள வேண்டும்.

12. **மன்னவ னேமலை மான்மக னேவிணின் வானவர்க்கு**
முன்னவ னேமுதல் ஆனவனே தந்தி முத்தனுக்குப்
பின்னவ னேஅயில் பெற்றவ னேமுன் பிரணவத்தைச்
சொன்னவ னேஅதின் சூக்கும னேஎதிர் தோன்றுவையே.

குறிப்புரை : மலைமான்= கயிலையரசன் - சிவபிரான். விணின்= வானுலகின். முன்னவன்= உயர்ந்தவன். முதல்= முதற்பொருள். தந்தி முகன்= யானைமுக விநாயகர்.முத்தன்= தூயவன். பின்னவன்= இளையவன். அயில்= வேல். சொன்னவன்= சிவபிரானுக்குச் சொன்னவன். சூக்குமன்= நுண்ணியன்.

பொழிப்புரை : அரசே! கயிலைஅரசனாகிய சிவபிரான் மகனே! தேவர்கள் அனைவருக்கும் உயர்ந்தவனே! அனைவருக்கும் முதற்பொருள் ஆனவனே! யானைமுகத்துத் தூயவனுக்கு - விநாயகருக்கு இளையவனே! அன்னையிடம் வேல் பெற்றவனே! முன்பு சிவபிரானுக்குப் பிரணவப்பொருள் சொன்னவனே! மிகமிக நுண்ணியனே! என்னெதிர் தோன்றியருள்க.

இலக்கணக்குறிப்பு : விணின் - இடைக்குறை.

13. **தோற்றுவை வாசி துலக்குவை ஆதியில் தொட்டவினை**
மாற்றுவை நீதம் வழுத்துவை ஏழை மனக்கவலை
ஆற்றுவை ஆசை அடக்குவை யாவும் அகன்றபின்பு
தோற்றுவை ஊறல் தெவிட்டுவை என்றனைச் சேவலனே.

குறிப்புரை : தோற்றுவை= பிறப்பிப்பாய். வாசி துலக்குவை= நல்லநிலை விளங்கச்செய்வாய். ஆதியில் தொட்டவினை= பண்டுமுதல்வந்த வினைப்பயனை. மாற்றுவை= அழிப்பாய். நீதம்= என்தகுதியை. ஆற்றுவை= குறைப்பாய். அடக்குவை= எனக்குக் கீழ்ப்படியச்செய்வாய். யாவும் அகன்றபின்பு= மாசுகள் தீர்ந்தபின். ஊறல் தோற்றுவை= தெளிவு உண்டாக்குவாய்..தெவிட்டுவை= நிறைவுதருவாய்.

பொழிப்புரை : சேவற்கொடி உயர்த்தியவனே! நீ என்னைப் பிறப்பிப்பாய், நல்லநிலை விளங்கச் செய்வாய். பண்டை வினைப்பயன்களை அழிப்பாய், தகுதியை வாழ்த்துவாய், அற்பனாகிய என்மனக்

கவலையை அழிப்பாய், ஆசையைக் கீழ்படியச்செய்வாய், மாசுகள் தீர்ந்தபின் எனக்குத் தெளிவு உண்டாக்குவாய், மனநிறைவும் தருவாய்.

விளக்கம் : பிறப்பித்தல் முதலான ஒவ்வொன்றும் படிமுறை வளர்ச்சியில் இறைவன் அமையசெய்தல் கூறினார்.

இலக்கணக்குறிப்பு : தோற்றுவை, துலக்குவை, மாற்றுவை, வழுத்துவை, ஆற்றுவை, அடக்குவை, தோற்றுவை, தெவிட்டுவை - முன்னிலை ஒருமைவினைமுற்றுகள்.

14. **சேவலம் தோகை முகிலாட நீலச் சிகியமர்ந்து**
பூவலம் போந்து பழம்பெற வேண்டிப் புரம்எரித்த
மாவலன் பாற்செல யானைகொண் டான்எனும் மாற்றமதால்
காவலன் ஆகிச் சிவகிரி மேவிய கந்தப்பனே.

குறிப்புரை : முகிலாட அம் தோகைச் சேவல் நீலச்சிகி என்க. முகில் ஆட= மேகம்பின்னே செல்ல - பிற்பட. அம்தோகைச் சேவல் நீலச்சிகி= அழகிய தோகையுடைய நீலநிற ஆண்மயில். பூ வலம் போந்து= பூமியை வலம் வந்து. மாவலன்= பேராற்றலுடைய சிவன். யானை கொண்டான்= யானைத்தலை யுடைய விநாயகன் பழம் பெற்றான். மாற்றம் அதால்= சொல்லால். காவலன்= உலகைக்காக்க வல்லவன். சிவகிரி= பழனிக்குன்று.

பொழிப்புரை : மேகம் பிற்பட, அழகிய தோகையுடைய நீலநிற ஆண்மயில் மேலமர்ந்து பழம்பெறவேண்டி உலகை வலம் வந்து முப்புரம் எரித்த பேராற்றலுடைய சிவபிரானிடம் செல்ல, நாரதர் தந்தபழத்தை யானைமுகத்து விநாயகர் பெற்றுக்கொண்டார் என்ற சொல்கேட்டு, உலகைக் காப்பவனாய்ச் சிவகிரியாகிய பழனிக்குன்றில் அமர்ந்த ஆண்டவனே அருள்க.

விளக்கம் : பழனித் தலவரலாற்றைச் சுருங்ககூறிய செய்யுள் இது.

இலக்கணக்குறிப்பு : யானை - ஆகுபெயர்.

15. **கந்தப்பன் என்றும் கதிர்வேல் கரன்என்றும் காதல்கொண்டார்**
சொந்தப்பன் என்றும் துரியத்தில் ஆடும் சுடர்அதனின்
வந்தப்பன் என்றும் சரவண மாது மனமகிழ்ந்து
தந்தப்பன் என்றும் உன(து)அடி யார்நிதம் சாற்றுவரே.

குறிப்புரை : சொந்தப்பன்= உரிமையுடையவன். துரியத்தில்= புருவநடுவில். ஆடும்= ஒளிரும். சுடர்= நெருப்புவடிவானகண். வந்தப்பன்= தோன்றியவன். தந்த= ஆறு தீப்பொற்றிகளையும் ஆறு குழந்தைகளாகத் தந்த.

பொழிப்புரை : அருள்தரு சண்முகநாதப்பெருமானே! உன்னைக் கந்தனாகிய தலைவன், ஒளிபொருந்திய வேலினைக்கையில் ஏந்திய தலைவன், உன்மேல் பத்திமையுடைய அடியவர்க்கு உரிமையுடைய தலைவன், துரியநடுவாகிய இருபுருவநடுவில் அமைந்த நெருப்புவடிவான கண்களில்

தோன்றிய தலைவன், சரவணமாகிய பெண்மனம் மகிழ்ந்து ஆறுகுழந்தைகளாகத்தந்த தலைவன் என்றெல்லாம் உன்னடியவர் உன்னைப்போற்றுவர்.

இலக்கணக்குறிப்பு : அப்பன் என்றசொல் தலைவன் என்ற ஒரேபொருளில் தொடர்ந்து வந்ததால் இச்செய்யுள் சொற்பொருள் பின்வருநிலையணி.

16. **சாற்றிடும் பாவணி திண்புயத் தோடும்சண் டன்கதிர்கள்**
தோற்றிடும் பாவணி சண்முகத் தோடும் துலங்குமணி
ஏற்றிடும் மார்பொடும் கண்டவர் தாழ எழுந்(து)அடியார்
போற்றிட நீயும் விரைந்(து)உற வேண்டும்நற் புண்ணியனே.

குறிப்புரை : சாற்றிடும்= போற்றும். பா அணி திண்புயம்= பாமாலையணிந்த வலிமையான தோள். சண்டன்கதிர்= சூரியனின் கதிர்கள். பாஅணி= அழகு அமைந்த. மணி ஏற்றிடும்= நவமணிமாலைகள் அணிந்த. தாழி= தாழ்ந்துவணங்க. உறவேண்டும்= வந்து பொருந்தவேண்டும்.

பொழிப்புரை : சிறந்ததாகிய புண்ணியமே வடிவானவனே! நீ, அனைவரும் போற்றுகிற பாமாலை அணிந்த வலியதோளும், சூரியனின் கதிர்களும் தோற்குமாறு ஒளிரும் அழகுஅமைந்த ஆறுமுகங்களும், ஒளிரும் நவமணிகளாலான மாலைகள் அணிந்த மார்பும் கொண்டு எழுந்து, உன்னைக் கண்டவர்பணிந்து வணங்க உன்னடியவர் போற்ற விரைந்து வந்து எம்மொடு பொருந்தவேண்டும்.

17. **புண்ணியம் என்பது யாதொரு போதும் புரிந்தறியேன்**
பண்ணிய பாவங்கள் எத்தனை யோகொடும் பான்மையதே
எண்ணிய போகம் கிடைத்திட வேவந்(து) இனிதருள்வாய்
திண்ணிய மான க்ரவுஞ்சனைச் சேதித்த சேதனமே.

குறிப்புரை : யாதொரு போதும்= எந்த ஒருநேரத்திலும். கொடும் பான்மையதே= கொடுமையான தன்மையுடையதே. எண்ணிய போகம்= விரும்பும் வீட்டின்பம். திண்ணியமான= வலிமையான சேதித்த= கொன்ற. சேதனமே= ஞானவடிவனே.

பொழிப்புரை : வலிமைபொருந்திய கிரவுஞ்சமலையாகிய தாரகாசூரனைக் கொன்றஞானவடிவனே! நான் புண்ணியம் என்பதை எந்தஒரு நேரத்திலும் செய்திலேன்; செய்த கொடியதன்மையுடைய பாவங்கள் மிகப்பல. ஆயினும் நான் விரும்பும் வீடுபேறு கிடைக்க இனிது அருள்வாயாக.

விளக்கம் : சூரன் பதுமன் தாரகன் ஆகிய மூவரும் உடன்பிறந்த அசுரர்கள் . இவர்கள் முறையே ஆணவம் கன்மம் மாயை என்றவற்றின் குறியீடுகள். முருகப்பிரானைக் கிரவுஞ்சமலையாக நின்று எதிர்த்துப்போர்புரிந்தவன் தாரகன். இதில் அவனை அழித்தது கூறினார். .

18. **சேதன மானது நீடிய தாகித் தெளிந்தமுத்தி**
சாதன மாக மனம்உவந் தேன்அந்தத் தன்மைபெற
வாதனை யாவும் எரிந்திட நீத்து மன(து)அடங்கப்
போதனை செய்(து)எனை ஆள்வாய் சிகிமலைப் புத்தமுதே.

குறிப்புரை : சேதனமானது= ஞானமானது. நீடியதுஆகி= நன்கு வளர்ந்து - பெருகி. முத்தி சாதனம் ஆக= முத்தியடைவததற்குக் கருவியாக. உவந்தேன்= அவாவினேன் - விரும்பினேன். வாதனை= துன்பம். எரிந்திட= நீறாக. நீத்து= விடுபட்டு. போதனை= உபதேசம்.

பொழிப்புரை : மயில்மலையில் புதிய அமுதமாக அருள்பாலிக்கின்றவனே! ஞானம் நன்கு வளர்ந்து, அது முத்திப்பேறடையக் கருவியாக உள்ளதை அறிந்துமகிழ்ந்தேன். அந்த நிலைமையடை, என்துன்பங்கள் யாவும் நீறாக, அவற்றிலிருந்து விடுபட்டு, மனமடங்க நீ எனக்கு உபதேசம் செய்து என்னை ஆண்டருள்வாய்

விளக்கம் : நம்அறிவு, சரியை கிரியை யோகம் ஆகியவற்றின் படிமுறை வளர்ச்சியில் வளர்வதால் அமைவதுஞானம். ஞானத்தால்மட்டுமே முத்தியடையவியலும் என்பதால் " சேதனமானது நீடியதாகித் தெளிந்த முத்திசாதனமாக மனம் உவந்தேன் " என்றார்.

" சரியை கிரியா யோக சாதனம் விடுத்ததெல்லாம்
சன்மார்க்கம் அல்ல " (தாயுமானவர். சின்மயானந்தகுரு. 2)

(விடுத்ததெல்லாம்= ஒழிந்தன எல்லாம். சன்மார்க்கம்= ஞானவழி)
" விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே " (,, பராபரக்கண்ணி157)

19. **புத்தமுது ஊறல் புனல்இழி பாதை புகுந்(து)அதனை**
நித்தமும் உண்(டு)இரு கால்ஆற அங்கு நிலைத்திருந்து
சித்தம் உவந்து பரானந்தம் மேவித் திகழ்ஒளியைப்
பத்தி இருந்திட வேண்டும்அச் சாதகம் பண்ணுவையே.

குறிப்புரை : புத்தமுது ஊறல் இழிபாதை= புதிய அமுதமூறும் ஆறாதாரப் பாதை. அதனை= புத்தமுதை. இருகால் ஆற= உள்ளிழுக்கும் காற்று, வெளிவிடும் காற்று (ஏற்றுதல் இறக்குதல்) அமைய. சித்தம்= மனம். பரானந்தம் மேலான இன்பம். ஒளி= ஒளிவடிவாம் இறைவன் பத்தி இருந்திட= பற்றிக்கொண்டு வாழ. அச்சாதகம்= அந்த நன்மை.

பொழிப்புரை : புதிய அமுதநீர் ஊறும் ஆறாதாரப்பாதையில் புகுந்து, அந்தப்புதிய அமுதை நாடோறுமுண்டு, உள்ளிழுக்கும்காற்று வெளிவிடும்காற்று ஆகிய இரண்டையும் அடக்கி, அங்கே தங்கி மனம் மகிழ்ந்து மேலான இன்பம்பொருந்த விளங்கும் ஒளியைப் பற்றிக்கொண்டு வாழவேண்டுகிறேன். அத்தகு நன்மையை எனக்கு அருள்.

விளக்கம் : காற்றை உள்ளிழுப்பது பூரகம், வெளிவிடுவது இரேசகம், உள்அடக்குவது கும்பகம் என்பர்.

இலக்கணக்குறிப்பு : பத்தி - பற்றி என்பதன் விகாரம்.

20. **பண்உவந்(து) ஓதிடும் கின்னரர் மாதர்கள் பந்தியதாய்**
நண்ணிடும் பூம்பொழில் சேர்ந்திடும் தோகை நவிரமதில்
தண்ணுல வும்தொடை யானது சாத்தித் தவமுனிவோர்
விண்ணுற ஓமங்கள் வளர்த்(து)ஓதி விரும்புவரே

குறிப்புரை : பண் உவந்து ஓதிடும்= பண்களை மகிழ்வுடன் பாடும். கின்னரர்= இசைவாணர் - இவர்கள் குதிரைமுகமும்,மனித உடம்பும் உடையவர் என்பர். பந்தி= வரிசை. தோகை சேர்ந்திடும்= மயில்வந்து சேரும். கின்னரர், மாதர்கள், தோகை பந்தியதாய் நண்ணிடும் பூம்பொழில் என்க. நவிரமதில்= தலையில் - கழுத்தில். தண் உலவும்= குளிர்ச்சியுடைய. தொடை= மாலை. விண்ணுற= ஓமத்தீ வானுற. ஓதி= மந்திரங்கள் சொல்லி.

பொழிப்புரை : பண்களை மகிழ்வுடன் பாடும் கின்னரர், மகளிர், மயில்கள் என்று வந்து சேரும் அழகிய சோலையில், தவமுனிவர்கள், பெருமானின் கழுத்தில் தண்ணிய மாலைகள் சாத்தி, ஓமத்தீ வானுற வளர்த்து, மந்திரங்கள் சொல்லிக் குன்றக்குடிப் பெருமானை விரும்புவர் - வழிபடுவர்.

இலக்கணக்குறிப்பு : தோகை - சினையாகுபெயர்.

21. **விரும்புவர் ஆசை விலக்கிஉன் பாத வெளியடைந்து**
பெரும்புகழ் தேடிப் பிழைத்திட வேஅவர் பேதமின்றித்
தரும்பதி ஈன்ற தனயன்என்(று) ஏத்தித் தழுவிடுவார்
அரும்பொரு ளேஉன் அருள்விளை யாட்டின் அதிசயமே.

குறிப்புரை : ஆசைவிலக்கி ..... பிழைத்திடவே அவர் விரும்புவர் என்க. பாதவெளி= திருவடியாகிய வெளி. புகழ்= துதி. பேதமின்றி= வேறுபாடுகருதாமல். பதி ஈன்ற தனயன் தரும் என்க. பதி= பதிப்பொருளாகிய சிவபிரான். தனயன்= மகன். தழுவிடுவர்= திருவடி சேர்வர்

பொழிப்புரை : எளிதில் அடைதற்கரிய அரியபொருளாய் விளங்குகிறவனே! ஆசையை ஒழித்து உனதுதிருவடியாகிய வெளியை அடைந்து. பெரிய துதியால்உன்னைத்தேடிப் பெற்று நலம்பெறவே அவர் அனைவரும் விரும்புவர். யார்க்கும் வேறுபாடு கருதாமல் அருளும் பதியாகிய சிவபிரான் அருளிய மகன்நீ என்று உன்னைப்போற்றி உன்னடிசேர்வர்.

விளக்கம் : ஆசை கீழ்த்தரமானது. எனவே " ஆசை விலக்கி " என்றார்.

" ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே " (திருமந்திரம். 2615)

22. **அதிசய மான கதைஒன்று கேள்இவ் வவனிமிசை**
சதிஅத னால்அனை யோனியின் வாசல் தனில்இழிந்து
மதிதடு மாறி வழிதெரி யாது மலைந்(து)இறந்து
கதிகெடு மாந்தர் கதிரோன் எனவரும் காரணமே.

குறிப்புரை : அவனி= உலகம். சதி= மனைவி. அனை= அந்த. யோனியின் வாசல்தனில் இழிந்து= பெண்குறிவாசலில் இருந்து வெளிப்பட்டு. மதிதடுமாறி= அறிவுகுழம்பி. மலைந்து= மயங்கி. கதி= நற்கதி.. கதிரோன் எனவரும் காரணமே= சூரியனாக வெளிப்பட்டு அருளும் மூலப்பொருளே.

பொழிப்புரை : இவ்வுலகில் மனைவியின் அந்தப் பெண்குறி வாசல்வழியே வெளிப்பட்டு, அறிவு குழம்பி, செல்லவேண்டிய வழிதெரியாமல் மயங்கி, நற்கதிகெட்ட மாந்தருக்குச் சூரியனாகவரும் மூலப்பொருளே. அதிசயமான ஒருகதை கேள்.

இலக்கணக்குறிப்பு : இச்செய்யுள் குளகம். (தன்னளவில்பொருள்முடியாதது).

23. **காரணம் ஆன கதியினைக் காணக் கசடறுத்துப்**
பூரணம் மேவிப் புக அறியாதவர் புன்மதியால்
ஆரணம் ஓதி அதுஇது வாமென்ற சங்கைகொண்டே
ஏரணம் பேசிப் பலனடை யாமல் இறப்பர்களே.

குறிப்புரை : காரணம் ஆன கதி= மூலப்பொருளாகிய அடைக்கலம் புகுமிடம். கசடு= முப்பாசம். பூரணம் மேவி= பொலிவுபெற்று. புக= திருவருளில் கலக்க. புன்மதி= அற்பஅறிவு. ஆரணம்= வேதம். அது இதுவாம்= பிரமம் உயிர் என்ற வேறுபாடில்லை - ஏகான்மவாதம். சங்கை= வழக்கம். ஏரணம்பேசி= தருக்கம்பேசி.

பொழிப்புரை : மூலப்பொருளாகிய அடைக்கலம் புகுமிடத்தைக்காண, உயிர்பற்றிக்கொண்டுள்ள ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்றுஅழுக்குகளையும் அறுத்து, அதனால் பொலிவுடன் இறைவனாகிய உன்னைப்பொருந்த அறியாதவர்கள், தமதுஅற்பஅறிவால் வேதமோதி, ஏகான்மவாதம் பேசும்வழக்கமுடன், தருக்கமிட்டு எவ்விதப்பலனுமடையாமல் இறப்பர்.

விளக்கம் : ஏகான்மவாதம் : முதல்வனும் உயிரும் பொன்னும் அணிகலனும்போல் அபேதம் - வேறுபாடிலாதவை. பசுபாசம் என்பன இல்லை பிரமமொன்றே உள்ளது என்று பலசெய்தி கூறுவதாகும்.

24. . **இறப்பர்க ளாம்விதி தன்னைவெல் லார்கள் இதைஅறிந்தோர்**
துறப்பர்க ளாம்இந்தத் தொல்லுல(கு) ஆசை துறந்துதன்னை
மறப்பர்க ளாம்அவர் வாய்திற வாது மவுனமுற்றுச்
சிறப்பர்க ளாம் உயர்நற்றவத் தோர்களின் சீலம்இதே.

குறிப்புரை : வெல்லார்கள்= வெல்லாதவர்கள். மௌனமுற்று= மோனநிலைகூடி.

பொழிப்புரை : விதியை வெல்லாதவர்கள் இறப்பார்கள். விதியை வெல்லாதவர்கள் இறப்பர் என்பதை அறிந்தவர்கள், ஆசைகளைத் துறப்பார்கள் என்பதால் பழைமையான உலக ஆசையைத் துறந்து தன்னைமறந்து உனது திருவருளில் திளைப்பார்கள். எதுவும் பேசாது மௌனமாய் இருந்து சிறந்தநிலை அடைவர். மேலான நல்ல தவவாழ்வினர் ஒழுக்கம் இதுவாகும்.

விளக்கம் : விதியை வெல்லத் திருஞானசம்பந்தர் காட்டும்வழி :

" அவ்வினைக்கு இவ்வினை யாம்என்று சொல்லும் அ஼தறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்துஎம் பிரான்கழல் போற்றுதும் நாம்அடியோம்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்." (திருமு 1 திருநீலகண்டம்)

(இவ்வினை= விதி / ஊழ். கைவினை= திருத்தொண்டு - சரியையமுதலியன. கழல் போற்றுதும்= திருவடியைப் போற்றுவோம். செய்வினை= ஊழ் / விதி. திருநீலகண்டம்= சிவபிரான் ஆணையாக இதுஉறுதி. ஊழால்வந்த நளிர்சுரம் இப்பாடலால் நீங்கியதென்பது வரலாறு)

25. **சீலம்என்(று) ஓதிடில் செருக்(கு)உறு மாந்தர் சினந்திடுவர்**
காலன்வந் தால்அவர் கால்கரம் நீட்டிக்கண் ணைவிழித்தே
ஓலமிட் டேங்கித் தமர்மனை சூழ உறங்குதல்போல்
காலம தாகி எரிநர கூடு கலங்குவரே.

குறிப்புரை : ஓதிடில்= சொன்ன அளவில். செருக்கு= ஆணவம். கால்கரம் நீட்டி= காலினைக் கையால் பற்றிக்கொண்டு. தமர் மனை சூழ= உறவினர் தம்வீட்டில் தன்னைச்சூழ இருக்க. காலமதாகி= உயிர்விட்டு.

பொழிப்புரை : ஒழுக்கமுடன் வாழவேண்டும் என்றுசொன்னால், ஆணவமுடையவர்கள் கோபங்கொள்வர். யமன் வந்தபோது அவர்கள் அவன் காலைப்பற்றிக்கொண்டு அவனைப்பார்த்துக் கதறி ஏங்கி, தம்சுற்றத்தார் தன்னைச்சூழஇருக்க, தாம் உறங்குவதுபோல் இறந்துகிடந்து, பின்தீவாய் நரகிடைப்பட்டு மனம் கலங்குவர்.

விளக்கம் : " உறங்குவது போலும் சாக்காடு " என்பது உலகப்பொதுமறை.

இலக்கணக்குறிப்பு : காலன் - காரணப்பெயர்.

26. **கலங்கிட வோஉந்தன் பாதார விந்தம் கலந்திருந்து**
துலங்கிட வோமனம் சுத்தம தாகிச் சுழிமுனையில்
இலங்கிட வோஅதை என்இரு காதில் இனி(து)உரைத்துச்
சலம்கெட ஓர்வழி சாற்றிடு வாய்குன்றைச் சற்குணனே.

குறிப்புரை : கலங்கிடவோ= மனம் வருந்தவேண்டுமா. பாதாரவிந்தம்= திருவடித் தாமரை. துலங்கிடவோ= ஒளிர. சுத்தமதாகி= மும்மலம் ஒழிந்து தூயதாகி. சுழிமுனை= மூலாதாரத்தில் இருந்து உச்சித்துவாரம்வரை நிற்கும் நடுநாடி. அதை = அந்த உபதேசத்தை. சலம்= வஞ்சனை/ பிடிவாதகுணம்

பொழிப்புரை : குன்றக்குடிக்குன்றில் எழுந்தருளியுள்ள நற்குணவடிவனே! நான்மனம் கலங்கவேண்டுமா? உன்திருவடித் தாமரையில் கலந்து ஒளிர, என்மனம் மும்மலமற்றுத்தூயதாகி, நடுநாடியாகிய சுழிமுனையில் விளங்க உரியமந்திரத்தை என்இருகாதுகளிலும் எனக்கு இனிமையுண்டாகச் சொல்லி என்பிடிவாதகுணம் கெட வழிகூறியருள்.

இலக்கனக்குறிப்பு : கலங்கிடவோ - வினாஓகாரம் எதிர்மறை குறித்தது. துலங்கிடவோ, இலங்கிடவோ - ஓகாரங்கள் அசைகள்.

27. **சற்குணம் என்ற பொருள்பெற வேண்டிச் சனகன்முதல்**
துற்குணம் தன்னைத் துறந்தோர்கள் யாவரும் சூழ்ச்சியதால்
நிற்குண மாம்உன் நிலையதைக் காண நெடி(து)இருந்து
பற்பல மாதவம் பண்ணிஉன் பாலில் பரவுவரே.

குறிப்புரை : சற்குணம்= நல்லகுணம். துற்குணம்= தீயகுணம். சூழ்ச்சியதால்= ஆராய்ச்சியின் மூலம். நிற்குணம்= குணங்குறிஇல்லாமை. நெடிது பற்பல மாதவம் பண்ணி இருந்து= நெடுங்காலம் பலவகை மாதவங்கள் செய்து காத்திருந்து. உன்பாலில் பரவுவர்= உன்னிடம் வேண்டி வணங்குவர்.

பொழிப்புரை : நற்குணங்கள் பெறவேண்டி, தீயகுணம்துறந்த சனகன் முதலிய அனைவரும் ஆராய்ந்து, குணங்குறியில்லா உன்நிலையை அடைய, நெடுங்காலம் பலவகைத்தவங்கள் செய்து காத்திருந்து உன்னை வேண்டி வணங்குவர்.

இலக்கணக்குறிப்பு : துறந்தோர்கள் - வினையாலணையும் பெயர். மாதவம் - உரிச்சொற்றொடர்.

28. **பரவிடும் ஏழைக்(கு) உதவிட வேண்டும் பலவரங்கள்**
கரவடம் ஆதி கொலை கறிகாமமும் கள்ளருந்தல்
பரமனை போகம் கவராடு தல்மற்ற பான்மைஎல்லாம்
வெருவிட யானும் விளங்கிட வேண்டும்என் விண்ணப்பமே.

குறிப்புரை : பரவிடும் ஏழை= வணங்கும் அற்பன். கரவடம்= திருட்டு. கறி= புலால் உண்ணல். பரமனை போகம்= பிறன்மனைவியை அனுபவித்தல். கவராடுதல்= சூதாடல். வெருவிட= என்னைக்கண்டு அஞ்ச.

பொழிப்புரை : பெருமானே! உன்னைவணங்கும் அற்பனாகியஎனக்குப் பலவரங்கள் அருளவேண்டும். திருட்டுமுதலியனவும், கொலை, புலால்உண்ணல், காமம், கள்குடித்தல், பிறன்மனைவியை அனுபவித்தல், சூதாடல் மற்றும் இவைபோன்றன என்னைக்கண்டு அஞ்சிஓட நான் நன்னிலையில் விளங்க வேண்டும். இதுவே என் வேண்டுகோளாகும்.

29. **விண்ணப்பம் ஒன்றல்லி ரண்டல்ல வேஉன் விரைகழலில்**
எண்ணிக்கை யாக இனி(து)இரந் தேன்செக தீஸ்வரனே
நண்ணிப்பல் காலமும் உன்பதம் மேவ நயந்(து)அடிமை
பண்ணிக்கொண் டால்அல்ல வோஎனக் கேநல்ல பாக்கியமே.

குறிப்புரை : விரைகழல்= மலரொத்ததும் வீரக்கழல் அணிந்ததுமான திருவடி. எண்ணிக்கையாக= பலவாக. செகதீஸ்வரனே= அண்டங்கட்கெல்லாம் இறைவனே. மேவநண்ணி= அடைய வந்து.அடிமை பண்ணிக்கொண்டால்= தொண்டனாக்கிக்கொண்டால்.

பொழிப்புரை : அண்டங்கட்கெல்லாம் இறைவனே! என் வேண்டுகோள் ஒன்றிரண்டல்ல. அவற்றை உனது மலரொத்ததும் வீரக்கழல் அணிந்ததுமான திருவடிகளில் பலவாக இனிமைதர வேண்டினேன். பலகாலமும் உன்திருவடியை அடையவருவதற்கு விரும்பும் என்னை அடிமையாக்கிக் கொண்டால்தான் எனக்கு நற்பேறாகும். அருள்க.

இலக்கணக்குறிப்பு : ஒன்றல்லிரண்டல்ல - அன்மை என்ற பண்புப்பெயர், அல் என்உ திரிந்தது..

30. **பாக்கியத் தால்இந்த மானிட தேகப் பலனடைய**
ஆக்கிவைப் பாய்உனை அஞ்சலன்(று) ஏத்தி அடிதொழுதேன்
தாக்கிய சூரனை வாகன மாக்கவும் தாங்கிஅவன்
தூக்கிய வாவந்து காத்தருள் வாய்இந்தத் தொண்டனையே.

குறிப்புரை : பாக்கியம்= நற்பேறு. அஞ்சல் என்று= அடைக்கலம் என்று. தாக்கிய= போர்புரிந்த. வாகனமாகவும் தாங்கி= ஊர்தியாக அருளி. தூக்கியவா= உயர்த்தியவனே.

பொழிப்புரை : இந்தமனித உடலெடுத்த நற்பேற்றின் பலனைநான் அடையும்பொருட்டு அதற்குத் தகுதியுடையவனாக ஆக்கிவைத்தருள். உன்னைஅடைக்கலம் என்றுவந்து உன் திருவடியை வணங்கினேன். உன்னுடன் போரிட்டசூரனை ஊர்தியாக ஆக்கிக்கொண்டு அவனை உயர்த்தியவனே! இந்தத் தொண்டனைக் காத்தருள்க.

விளக்கம் : பரிணாம வளர்ச்சியில் - படிமுறை வளர்ச்சியில் மேன்மேலுயர்ந்தமனிதனாகிய நான் கீழ்நிலையடையாமல், மானிடப்பிறப்பின் பயனடைய - உயர்வுபெற அருள்க என்றார்

உன்னுடன் போரிட்டவனுக்கு அருளியநீ, உன்தொண்டனாகிய என்னைக்காத்தருள் என்றார்

திருச்சிற்றம்பலம். .